# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம்
## (கூட்டிணைத்தல்)

**களனி பௌத்த மகளிர் தருமச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர் அவர்களால்*
*2021, ஒற்றோபர் மாதம் 06 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2021, செத்தெம்பர் மாதம் 27 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **74 ஆம் சட்டமூலம்** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 24.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம்**
**(கூட்டிணைத்தல்)**

## களனி பௌத்த மகளிர் தருமச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை

"களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம்" என அழைக்கப் படுவதும் அறியப்படுவதுமான சங்கம் ஒன்று ஐம்பத்தாறு (56) ஆண்டுகளாக அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள் களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இதற்குமுன்னர் இலங்கையில் கம்பஹா மாவட்டத்தில் கிரிபத்கொடவில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட சங்கமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும்:

அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்துடன் சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்

***1***. இச்சட்டம், *2021* ஆம் ஆண்டின் ஆம் இலக்க, களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

களனி பௌத்த மகளிர் தருமச் சங்கத்தைக் கூட்டிணைத்தல்

***2***. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) களனி பௌத்த மகளிர் தருமச் சங்கத்தின் தற்போதைய உறுப்பி னர்களாக உள்ளவர்களும் அத்துடன் இத்தால் அமைத்துருவாக்கப் படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம்" என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறா

வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :–

(அ) பௌத்தர்களுக்கு தியானம் செய்யும் முறைகளை அதிகரிப்பதற்கு அவசியமான வசதிகளை வழங்குதல்;

(ஆ) உலகெங்கும் வெளியிடப்பட்ட பௌத்த மதம் சம்பந்தமான புத்தகங்களையும் மாத வெளியீடுகளையும் சேகரித்தலும் அவை பௌத்தர்களினால் இலகுவாகப் பெறப்படுவதற்கான ஒழுங்கேற்பாடுகளைச் செய்தலும்;

(இ) கூட்டுத்தாபனம், சமூகசேவையாளர்கள், புத்திஜீவிகள், நன்கொடையாளர்கள் மற்றும் கொடையளிக்கும் மக்களுடனும் இலங்கையிலுள்ள வேறெவையேனும் ஒத்த சேமநலச் சங்கங்களுடனும் மன்றங்களுடனும் சிறந்து ஒருங்கிணைதலும் தகுந்த இணைப்பை ஊக்குவித்தலும்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஊக்குவித்து அபிவிருத்தி செய்வதற்காகக் கூட்டுத்தாபனத்தினால் தேவைப்படக்கூடியவாறான புத்தகங்களையும், துண்டுப் பிரசுரங்களையும், மாதவெளியீடுகளையும் அச்சிடுதலும், வெளியிடுதலும், விநியோகித்தலும்;

(உ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களது ஒத்த குறிக்கோள்களையுடைய வேறு சமாசங்களுடனும், சங்கங்களுடனும், ஒழுங்கமைப்புகளுடனும் ஒத்துழைப்புடன் பணியாற்றுதல்;

(ஊ) பௌத்த மதம் பற்றி எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் செயலாற்றுதலும் பௌத்த மதத்தை உலகெங்கும் பரப்புவதற்கு அவசியமான நடவடிக்கை களை எடுத்தலும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்

**4.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல் (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபையொன்றினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்; அது, தவிசாளர், துணைத்தவிசாளர், செயலாளர், துணைச் செயலாளர்கள், பொருளாளர், துணைப் பொருளாளர் மற்றும் இரு போசகர்களையும் வேறு பதினாறு (16) உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்; அவர்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதியன்று சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களாகவிருந்த ஆட்கள், முதலாவது நிறைவேற்றுக் குழுவை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:-

(i) நிறைவேற்றுக்குழு ஒவ்வொரு மாதத்திலும் ஒருதடவை கூடுதல் வேண்டும்.

(ii) குழுவின் அலுவல்கள், சங்கத்தின் குறிக்கோள்களுக்கும் சங்கத்தின் அமைப்புவிதிக்கும் இணங்கப் புரியப்படுதல் வேண்டும்.

(iii) நிறைவேற்றுக் குழுவுக்கு அறிவிக்காமல் மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு வருகைதராதிருக்கும் பதவிதாங்குநர்கள், தமது பதவியை வறிதாக்குகின்றவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(iv) நிறைவேற்றுக் குழுவிலிருந்து தமது பதவியை வறிதாக்கும் அலுவலர்களுக்குப் பதிலாக வேறு உறுப்பினர்களை நியமிப்பதற்கு நிறைவேற்றுக் குழு தத்துவமுடையதாதல் வேண்டும்.

(v) ஏதேனும் அவசர நிலைமையின் விடயத்தில் குறுகியகால அறிவித்தலுடன் நிறைவேற்றுக்குழுவின் அவசரக் கூட்டமொன்று அழைக்கப்படலாம்.

(vi) நிறைவேற்றுநர் குழுவின் பதவிக்காலம் மூன்று (3) ஆண்டுகளெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) (1) (i) கூட்டுத்தாபனத்தின் பிரதான போசகர், றுஹுண பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகவுமுள்ள, கிரிபத்கொட ஸ்ரீ சுதர்ஷணராமயவின் பிரதான மதகுருவாகவுள்ள அதிவணக்கத்துக்குரிய மாக்கோல மங்கள தேரராகவிருத்தல் வேண்டும்.

(ii) சொல்லப்பட்ட வணக்கத்துக்குரிய மாக்கோல மங்கள தேரரின் இறப்பை அல்லது பதவி விலகுகையை அடுத்துப்பின்னர், நிறைவேற்றுக் குழு, சங்கத்தின் தலைவரினது அங்கீகாரத்துடன் சங்கத்தின் பிரதான போசகராக எவரேனும் பொருத்தமான பௌத்த பிக்குவை நியமித்தல் வேண்டும்.

(2) (i) சங்கத்தின் சமயத்துறைசாராப் போசகர்கள் பதவிகளை வகிக்கின்றவர்களான திருமதி பீ.ஜீ. எஸ். பெரேரா, ஓய்வுபெற்ற அதிபர் (அதிபர் சேவை- தரம் I, சிங்கள பயிற்சிபெறுநர், கலைமாணி, கல்வியிலான திப்புளோமாச் சான்றிதழ் வைத்திருப்பவர்) மற்றும் சிறுவர்கள் அபிவிருத்தியிலான திப்புளோமாவை வைத்திருப்பவரும் செத்மக சிங்கிதி செவனவின் அதிபருமான திருமதி ஹர்ஷனி நவரத்ன என்போர் கூட்டுத்தாபனத்தின் சமயத்துறைசாராப் போசகர்களாகவிருத்தல் வேண்டும்.

(ii) சொல்லப்பட்ட சமயத்துறைசாராப் போசகர்களாகவுள்ளோர் இறப்பதனை அல்லது பதவிவிலகுவதனை அடுத்துப்பின்னர், பின்வரும் தகைமைகளையுடைய சமயத்துறைசாராப் போசகர்கள்,

சங்கத்தின் தலைவரைக் கொண்டுள்ள நிறை வேற்றுக் குழுவினால் அவர்களின் வெற்றான பதவிகளுக்கு நியமிக்கப் படுதல் வேண்டும்:-

(i) சங்கத்தின் நீண்டகால உறுப்பாண்மையைக் கொண்டுள்ள உறுப்பினர்கள்.

(ii) சங்கம் மற்றும் மதம் பற்றிப் போதிய அனுபவங்களையுடையவர்கள்.

(iii) கல்வியறிவுள்ள, புத்திசாதுரியமான மற்றும் சமுகத்தினால் ஏற்றங்கீகரிக்கப் பட்டவர்கள்.

(4) (1) நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை:

வருடாந்தப் பொதுக் கூட்டத்தினை அடுத்துப்பின்னர் நடாத்தப் படும் முதலாவது நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில், தவிசாளர், துணைத் தவிசாளர், செயலாளர், இரு துணைச் செயலாளர்கள், பொருளாளர், துணைப் பொருளாளர், இரு போசகர்கள் மற்றும் வீடமைப்பு முகாமையாளர் உட்பட நிறைவேற்று உறுப்பினரொருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் சபை நிறைவேற்றுக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கிணங்கச் செயலாற்றுதல் வேண்டும்;

(ஆ) நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் சபை சொல்லப்பட்ட கடமையை மூன்று (3) ஆண்டுகளுக்கு வகித்தல் வேண்டும்;

(இ) இச்சபையின் உறுப்பினர்கள் மூன்று (3) ஆண்டுகளுக்கு மேற்பட சங்கத்தின் முனைப்பான உறுப்பினர்களாக விருத்தல் வேண்டும்;

(ஈ) சங்கமானது, அவசியமானவிடத்து, அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களின் எவையேனும் உரிமைகளை, உரித்துகளை அல்லது சட்ட உரிமைகளைக் கைமாற்றுதல், ஈடுவைத்தல், விற்பனைசெய்தல், அபிவிருத்தி செய்தல், குத்தகைக்குக் கொடுத்தல், கொடுத்துமாற்றல் ஒப்பந்தங்களில் கையொப்பமிடுதல் மற்றும் அத்தகைய நோக்கங்களுக்காகக் கட்டிடங்களை வாங்குதல், நிர்மாணித்தல் மற்றும் அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் என்பவற்றுக்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) வீடமைப்புக் குழு :-

வீடமைப்பு முகாமையாளர் உட்பட ஆறு (6) உறுப்பினர்கள் இக்குழுவுக்கு நியமிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) வீடமைப்புக் குழுவின் தவிசாளர் நிறைவேற்றுக் குழு உறுப்பினரொருவராக இருத்தல் வேண்டுமென்பதுடன் ஏனைய உறுப்பினர்கள் சங்கத்தின் உறுப்பாண்மையைக் கொண்டிருத்தலும் வேண்டும்;

(ஆ) வீடமைப்புக் குழுவானது, அடுத்து வருடாந்தப் பொதுக் கூட்டம் வரை விதித்துரைக்கப்பட்ட கடமையைப் புரிதல் வேண்டும்;

(இ) கிரில்லவல, வேபட, ஜயா மாவத்தை, 307/16 ஆம் இலக்கத்திலுள்ள செனஹச சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினது பெண் பிள்ளைகளின் கல்வி சுகாதாரம், பராமரிப்பு மற்றும் வேறு தேவைகள் பற்றிய விதப்புரை நடவடிக்கைமுறை, மாதாந்தக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்;

(ஈ) அறிவித்தலின்றி நான்கு (4) தொடர்ச்சியான கூட்டங்களுக்கு வருகைதராதிருப்பின் உறுப்பாண்மை இல்லாதொழிக்கப்படும்;

(உ) நிறைவேற்றுக் குழுவானது, தேவைப்படக்கூடியவாறாக வீடமைப்புக் குழுவை நியமிப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

**5**. (*1*) இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு நேர்முற்போந்த திகதியன்று சங்கத்தின் உறுப்பினர்களாக வந்த ஆட்களின் பெயர் களும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராக உரியமுறையில் நிரலிற்சேர்க்கப்பட்டவர்களினதும் பெயர்களும் உட்பட சபையானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுவித்தல் வேண்டும். *உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு*

(*2*) இடாப்பானது பின்வரும் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

உறுப்பினரின் பெயர், முகவரி, தான்புரியும் தொழில், இடாப்பில் குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் உறுப்பாண்மை இல்லாதொழிந்த திகதி.

**6**. உறுப்பாண்மையின் வகுப்பாக்கம் பின்வருமாறாகும்:- *உறுப்பாண்மை யின் வகுப்பாக்கம்*

பொது உறுப்பினர்கள்:

(i) நுழைவுக் கட்டணமும் மாதாந்த உறுப்பாண்மைக் கட்டணமும் செலுத்தப்படுதல் வேண்டும். (மாதாந்தம் அல்லது வருடாந்தம் செலுத்தப்படலாம்). சங்கப் பேணுகைக் கட்டணமும் சேமநலக் கட்டணமும், பொதுக் கூட்டத்தில் செய்யப்பட்டவொரு முடிபின்மீது செலுத்தப் படுதல் வேண்டும்.

ஆயுட்கால உறுப்பினர்கள் :

(ii) நுழைவுக் கட்டணமும் ஆயுட்கால உறுப்பாண்மைக் கட்டணங்களும் ஒரு தடவையில் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் சேமநலக் கட்டணங்கள், பொதுக்கூட்டத்தில் செய்யப்பட்டவொரு முடிபின்மீது செலுத்தப்படுதலும் வேண்டும்.

கௌரவ உறுப்பினர்கள்:

(iii) நுழைவுக் கட்டணங்கள் அல்லது உறுப்பாண்மைக் கட்டணங்கள் விதிக்கப்படுவதில்லை. புத்த சாசனத் துக்குப் பெருஞ்சேவையாற்றியுள்ளவரும் சங்கத்தின் உறுப்பினரொருவராகவிருப்பதற்குத் தகைமையுள்ள வருமான எவரேனுமாள், மூன்றிலிரண்டு (2/3) பங்கினரின் வாக்கின் மூலம் நிறைவேற்றப்பட்டவொரு

தீர்மானத்தின்மேல் கௌரவ உறுப்பாண்மைக்கு உரித்துடையவராகவுள்ளார். கௌரவ உறுப்பினர்கள் ஐந்து (5) உறுப்பினர்களை விஞ்சுதலாகாது. கௌரவ உறுப்பாண்மை வழங்கப்பட்டுள்ள ஆட்கள் உறுப் பாண்மை உரிமைகளுக்கு உரித்துடையோராகவுள்ளனர்.

நிறைவேற்றுக் குழுவின் உறுப்பின ரொருவராக இருப்பதற்கான தகைமை யீனங்கள்

**7**. நிறைவேற்குக் குழுவின் உறுப்பினரொருவராகவிருப்ப தற்கான தகைமையீனங்கள் பின்வருமாறாகும்:-

(i) களனி பௌத்த மகளிர் சங்கத்தின் உறுப்பினரொருவராக இல்லாதிருத்தல்.

(ii) பௌத்தர் ஒருவராக இல்லாதிருத்தல்.

(iii) சித்தசுவாதீனமற்ற ஆளொருவராக இருத்தல்.

(iv) தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் ஒழுக்கக்கேட்டை உட்படுத்தும் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவராக இருத்தல்.

கூட்டுத்தாப னத்தின் தத்துவங்கள்

**8**. *(1)* இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத் தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கென, கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) (i) கூட்டுத்தாபனம் தொடர்பாக வங்கிக்கணக்குகளைத் திறத்தலும், பேணுதலும், மூடிவிடுதலும்;

(ii) கூட்டுத்தாபனத்தின் உதவு தொகைகளையும் மானியக் கொடைகளையும் நன்கொடைகளையும் அல்லது எல்லா வகையினவையுமான உதவிகளை யும் நன்கொடைகளையும் கோருதலும் ஏற்றுக் கொள்ளுதலும்;

(ஆ) (i) கிரில்லவல, வேபட, ஜயா மாவத்தை, 307/16 ஆம் இலக்கத்திலுள்ள “சௌஹச சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின்” (சௌஹச தெரி செவன) சார்பில் வங்கிக் கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும்;

(ii) கிரில்லவல, வேபட, ஜயா மாவத்தை, 307/16 ஆம் இலக்கத்திலுள்ள "சென்ஹச சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின்" (சென்ஹச தெரி செவன) சார்பில் நன்கொடைகளையும், எல்லா வகையினவையுமான உதவிகளையும், நன்கொடைகளையும், கொடைகளையும் கோருதல் அல்லது பெறுதல்.

(இ) எவரேனுமாளுடன், ஏதேனும் கம்பெனியுடன் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதல்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக் கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்கெடுத்தல், நிர்மாணித்தல் அல்லது வேறுவகையாகப் பெறுதல்;

(உ) அவசியமான அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவி நீக்குதலும்;

(ஊ) கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக ஊழியர்களின் சம்பளம், படி மற்றும் பணிக்கொடையைச் செலுத்துதலும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக இலங்கையில் வேலைப்படையினருக்குப் பயிற்சியளித்தலும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் குறிக்கோள்களுள் எல்லாவற்றையும் அல்லது எவற்றையும் எய்துவதற்கு அவசியமானவாறான அல்லது தோதானவாறான அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்

**9.** (1) பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகவிராத விதிகளைக் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கஞ் செய்தல், ஒவ்வொரு வகுதியனரினாலும் செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள் மற்றும் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல், அவர்களை விலக்குதல் அல்லது அவர்கள் பதவி நீங்குதல்;

(ஆ) நிறைவேற்றுக் குழுவின் உறுப்பாண்மையை வைத்திருக்க வேண்டிய அலுவலர்களும் அந்த அலுவலர்களை நியமித்தலும்;

(இ) நிறைவேற்றுக் குழுவினதும் மற்றும் வேறு பல்வேறு அலுவலர்களினதும், முகவர்களினதும், சேவையாளர்களினதும் பணிக்கடமைகளும் பொறுப்புக்களும்;

(ஈ) (i) கூட்டுத்தாபனத்தின் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறையும் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தலும்.

(ii) சொல்லப்பட்ட விதிகளுக்கு (1) ஆம் உட்பந்தியிற் குறிப்பிடப்பட்டவாறான அதேமுறையில் எதுவும் சேர்க்கப்படலாம், அவை திருத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம்.

(iii) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்

**10.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்துக்காகவும் அதன் கணக்காலும் கொடைகள், நன்கொடைகள், ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் அல்லது கட்டணங்கள் என்றவகையாகப் பெறப்பட்ட எல்லாப்பணங்களும், கூட்டுத்தாபனத்தின் வரவுக்குச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வங்கிகளில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனம் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*சங்கத்தினால் செலுத்தப்படற் பாலவையும் சங்கத்திற்குச் செலுத்தப்படற் பாலன வையுமான தனிசுகள்*

**11**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்றுள்ள சங்கத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று சங்கத்துக்கு வருமதியான எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப் பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*நிதியாண்டு*

**12**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்*

**13**. (i) கூட்டுத்தாபனம், அதன் வருமானமும், செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(ii) கூட்டுத்தாபனத்தின் இறுதிக் கணக்ககள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் சொல்லப்பட்ட அறிக்கை, கூட்டுத்தாபனத்தின் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(iii) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது–

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்

பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக உள்ளவரும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காய்வாளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைக் கொண்டவராக உள்ளவருமான தனியாள் ஒருவர்; அல்லது

(ஆ) எக்கணக்காளர்கள் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளருள் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும் இருப்பதுடன் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைக்கொண்டவராகவும் உள்ளாரோ அக்கணக்காளர்கள் குழுமம் ஒன்று,

எனப்பொருள்படும்.

**14**. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களை உடையதும் அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

கலைக்கப்பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்

**15.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை, தலைவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டுமென்பதுடன் சபையின் தலைவர் மற்றும் செயலாளரின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் அது பொறிக்கப்படுதலுமாகாது; அத்துடன் அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை

**16.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்

**17.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலேங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்